## அவன்!



உள்ளம் பிறந்தொரு ஒலிவடிவாகி;
உலகம் நிறைந்தொரு ஒளிவடிவாகி;
கள்ளம்பேணா மனத்துள் நாளும்,
காட்சியுமாகும் பெருவடிவாகி,
உள்ளம் விரும்பிய உருவினிலெல்லாம்;
உயிர்த்தெழுந்தேகும் திருவடிவாகிப்,
பள்ளமும் மேடும் பாய்ந்திடும் புலியும்,
பொல்லாதவரும் புவியினை ஆள;
உள்ளம் நிறைந்தோர் உலகினில் சிலரே;
என்றே ஆயினும், யாவையும் நிறைவாய்;
அள்ளியே அணைக்கும் அறிவினில் பெரியோன்;
வல்லோன் அன்பின் வடிவினன் தானே!
**08-04-1997**

## அரங்கனே அச்சுதா போற்றி போற்றி!



ஏடெடுத்தானை அந்த இனியானை; அரங்கனை,
நாடெடுத்தேற்றும் வல்லோனை, மாலவனை;
பாவெடுத் தேற்றும்படி யெனைப் பணித்தானை,
காடெடுத்துப் பிறந்தானைக் கனிவுடை மாதவனை,
நாடெடுத்தார் நவில்வரே நாராயணா வென்றே!

## தேடுவதெந்நாளோ!



ஒரு பொருள் இருந்து,
ஒரு பொருள் பிறந்து,
உன்னதமாக உலகியல் உழன்று,

தன்வசமாகும் பொருள்கள் யாவும்;
தமதென்றே இருந்து,
இருப்பதும், இருந்ததும்,
இல்லை யென்றாகும் என்பதும் மறந்து,
என்புதோல் உடம்பும் உடையது அல்ல;
என்பதை யுணராது உழலும் மனமே!

சித்தமாய் சத்தியம் சேர்;
நெஞ்சில் நடம் புரியும்,
ஈசனைத் தேடுவதென்னாளோ!
**23-02-2018**

## அருணனே! ஈசனே!! போற்றி! போற்றி!!



எழுகின்ற ஒளியுள் நிறைபவனே!
தொழுகின்ற கையுள் அமர்பவனே!
மழுவென மான்யென மாயக்
கதையுள் உறைவோனே!
விழியுள் மூடி வியனுலகம் நோக்க,
புழுவின் விழியிலும் போர்க்குண
மனத்திலும் எழுவோனே! ஊழாய் வினையாய்
ஒவ்வொரு கதையிலும் ஆள்வோனே!
சூழும் மனத்தின் உள்ளொளியே
சுடர் அறிவே வாழி நீ! 09-06-2021

## ஈசனடிப் போற்றி! போற்றி!!



ஓம்! அருளினில் நிறைந்தாய் போற்றி!
ஓம்! ஆனந்தக் கடலே போற்றி!
ஓம்! இகத்தின் பொருளே போற்றி!
ஓம்! ஈடில்லா நிறையே போற்றி!
ஓம்! உருவில்லாத் தேவே போற்றி!
ஓம்! ஊழ்வினைக் களைந்தாய் போற்றி!
ஓம்! எங்களின் பரமனே போற்றி!
ஓம்! ஏற்றமேத் தருவாய் போற்றி!
ஓம்! ஐயனே அருளே போற்றி!
ஓம்! ஒப்பிலா மாமணியே போற்றி!
ஓம்! ஓங்காரப் பொருளே போற்றி!
ஓம்! ஔடதமானாய்ப் போற்றி! போற்றி!!
ஓம்! அஃறிணையும் நிறைத்தாய் போற்றி
ஓம்! வல்லோனே! பரம்பொருளே! போற்றி! போற்றி!!
**18-10-2019**

## பற்றுவேன் யான்!



போற்றுதலும் வேண்டேன்!
தூற்றுதலும் செய்யேன்!
மாற்றமில் வாழ்வில்
மறுபடியும் பிறக்கேன்!
தோற்றமோ; மறைவோ;
தொல்லையாம் இப்பிறப்பில்,
தூற்றுதலும் வேண்டேன்!
போற்றுதலும் காணேன்!
காற்றதுவும் நெஞ்சக் குழியில்,
கனலும் காலம் வரையில்;
சாற்றுவேன் பரம்பொருளாம்;
கண்ணன் திருவடியே!
==0== **07-11-2019**

## ஈசனே போற்றி!



குறளடி போன்று,
ஈரடி கொண்ட ஈசனே போற்றி!
அறமாய் நின்ற,
அருளே அரனே பரமே போற்றி!
திறனுடை நெஞ்சின்
தேய்வக் கழலே, சிவமே போற்றி!
உறவாய்; ஒளியாய்;
ஓங்காரமாய்; நிறைந்தாய், போற்றி!
மறையின் பொருளே
மாணிக்க ஒளியே நாளும் போற்றி! போற்றி!!
8/8/2020 10:13 am

## எண்ணுக மனமே கண்ணனைத் தினமே!

கண்ணன் என்பவன் காதலின் கோமான்!
எண்ணிடும் போழ்தில் அறிவில் கொற்றவன்!
புண்ணிய நெஞ்சினன் புன்னகை மன்னன்!
கண்மலர் யாவினும் காட்சியாய் திளைப்பவன்!
என்மனக் கூட்டில் எந்நாளும் வாழ்பவன்!
அன்னவன் அழகோ அளவிலா ஆனந்தம்!
தென்னக மாந்தரின் தெய்வமாய் நிறைந்தவன்!
மன்பதைக் காத்திடும் மருவிலா மாயோன்!
காடுறைக் கோமகன் காரிருள் வண்ணமாய்,
தேடுவார் நெஞ்சினில் திகழும் மாயவன்!
ஆடுவார் மனத்தில் ஆளுமை ஆகுவான்!
நாடுவார் எவரையும் நலமுடன் காப்பனே!
-- **கவிவளவன்** (11-02-2020) 2 PM

## அனுமனே போற்றி! போற்றி!



அஞ்சனை மைந்தா போற்றி!
அருந்தவச் செல்வா போற்றி!
வெஞ்சமர் களைந்தாய்ப் போற்றி!
வியனுறு அறிவே போற்றி!
பஞ்சமில் அருளே போற்றி!
பைந்தமிழ் கோவே போற்றி!
செஞ்சொல் வீரா போற்றி!
செவ்விய தேவே போற்றி!

சீர்மிகு அறிவைத் தந்து,
சிந்தையில் நிறைந்தாய்ப் போற்றி!
பார்புகழ் எங்கள் தேவே!
பலமெலாம் அருள்வாய் போற்றி!
கார்முகில் கண்ணன் அருளைக்;
கனிந்து நீ தந்தாய் போற்றி!
போர்க்குணம் நெஞ்சில் நீக்கி,
புத்துயிர் தந்தாய் போற்றி!

வஞ்சமில் அறிவைத் தந்து,
வானுயரச் செய்தாய் போற்றி!
தஞ்சமே அன்பு என்றாய்!,
தரணியே செல்வம் என்றாய்!
எஞ்சான்றும் என்தலைவன் நீயே!
என்நாளும் அருள்வாய் தானே!
கொஞ்சும் சீர் அன்னல் நீயே!
குவலயம் காப்பாய் அன்றோ!
**(04-01-2019)**

## போற்றுவேன்! *14-06-2020*

ஒளியாய்; ஒலியாய்; உழலும்
வாழ்வின், உன்னத நிலையாய்;
வளியாய், உயிராய் வாழ்வின்
கலனாய்; ஊனையும் நிறுத்தும்;
எளியார் மனமும் ஏந்திடும்
நிறையாய் நின்றதாம் திருவடி!
அளித்தநற் கொடையாய் அருந்தவத்
தமிழால் போற்றுவேன் மகிழ்ந்தே!

## வேங்கடவன்! 23-01-2021

அள்ளிக் கொடுக்கும் எங்கள்;
வைகுண்ட வாழ்பதியாம்!
வள்ளல் பெரும் பசுக்கள்,
வளர்த்த கண்ணனவன்;
தெள்ளிய அந்த சிங்கமாயும்,
அல்லிக்கேணி அன்னலாயும்,
உறையும் கள்ளர்பிரான்;
வேங்கடவன் காப்பான் நிறைந்து!

## தேடுவேன் மலரடி!



தேடியென் மனதுள் தேவைகள்;
வளர்ந்திடத் தேவையில்லை!
ஆடியென் மனதுள் ஆசைகள்;
வளர்ந்திடத் தேவையில்லை!
கூடியென் மனதுள் கொள்கைகள்;
சாற்றிட ஆசையில்லை!
பாடியென் மனதுள் பசுமைகள்;
நிறைத்திட வேலையில்லை!

சூடியென் மனதுள் சுகங்களைத்;
தேடிட ஆசையில்லை!
நாடியென் மனதுள் நன்மைகள்;
அன்றியோர் செயலுமில்லை!
ஓடியென் மனதுள் ஒளிந்திடும்;
ஆசைகள் ஏதுமில்லை!
நாடியுன் மலரடி நாளும் தேடிட,
வன்றியோர் ஆசையில்லை!
20-06-2008

## யாவும் அந்தப் பரம் பொருளாம்!

திக்கெட்டும் நிறைகின்ற
தேமதுரத் தமிழ்போலே,
திகழ்கின்றாள் அன்னையிவள்!

இவளே சக்தி! இவளே செயல்!
யாவும் இவளே!
காத்தலும் அழித்தலும்,
கலங்கும் மனத்திடை;
நிறைதலும் இவளே!

பிணியும் இவளே!
பிணிக்கு மருந்தும் இவளே!
தேடுவார்க்குத் தெளிவானவள்!
வாடுவார்க்கு நலமானவள்!

இருப்பதும் அவளென்றும்
இல்லாததும் அவளென்றும்
நினைப்பார் தமக்கு,
நிலையானவள்! நெறியானவள்!
பரம்பொருளின் வடிவானவள்!

பார்த்தவுடன் எழும்,
இந்த வரிகளின் செயலானவள்!
நற்சிந்தையானவள்!
யாதும் அவளே! எதிலும்
அவளே! அவளே சக்தி!
அவளே அறிவு!
ஊனும் அவளே! உயிரும் அவளே!
அவளே சக்தி! வாழியவே!!




## எமையாளும் நிதியே! May 2003

அலைமோதும் கடலோரம்;
அழகான எழிலோடு,
நின்றாளும் என்றன் அருளே!
மலைமீது ஆண்டாளும்;
மண்மீதில் ஆண்டாளும்,
எனை அணைதேகும் வடிவே!
கலைகூறும் வடிவழகும்;
கணக்கின்றி அருள்தனையும்,
அளிக்கின்ற என்றனுயிரே!
வலைபோட்டு அரித்தாலும்;
வானவர்க்கும் கிடைக்காத,
இன்பத்தின் பேருநிதியே!
வலக்கையில் சங்கேந்தி;
இடக்கையால் அடிகாட்டி,
எமையாளும் பேரெழிலே!
கலையாத மீசைக்கும்;
கனிவான பார்வைக்கும்,
இணையேது சொல்நீயே!
அலைகூவ தேவியவள்;
நெஞ்சில் ஆட்சியுறும் போதும்,
இடப்புறத்தில் தேவியவள்,
வலைகொஞ்ச நின்றிருக்க;
எமைகாக்கும் பரம்பொருளே!
என்நாளும் காப்பாய் நீயே!

## கண்ணனே போற்றி!

சொல்லும் கண்ணன்,
சொல்வதும் கண்ணன்;
சுவையும் கண்ணன்!
அல்லும்பகலும்அழற்றும்,
வாழ்வும் கண்ணன்!
வளமும் கண்ணன்!
எல்லாமாய் எதிலுமாய்,
நிறையும் பரம்பொருளே!
பரந்தாமா!
போற்றி! போற்றி!!
02-09-2018

## தாயே வருக!

ஊழின் நிலையதுவோ;
ஓயாத தொல்லையாமே!
நின்னையே சரணடைந்தேன்!
நேசக் கரங்குவித்தேன்!
அல்லலைப் போக்கிடுவாய்!
அனுதினமும் காத்திடுவாய்!
இற்றைநாள் வேண்டி நின்றேன்!
இயல்புடன் அருள்புரிவாய்!
அன்புடனே காத்திடுவாய்!
இத்தரையில் உனைப்போலே
இயன்ற தெய்வம் வேறுண்டோ?

## வரலஷ்மி நோன்பிற்கு! 20-08-2021

மாதவன் நெஞ்சில் வாழும்;
மங்களச் செல்வி யெனவாய்,
தீதறு அன்பில் தோய்ந்து,
திக்கெட்டும் போற்றி வாழும்!
நாதமாய் வாழ்வின் அறங்கள்;
நலமுடன் காத்து வாழ,
மாதவள் அருள்வாள் என்றே,
மங்கள நாளில் வேண்டுவோமே!

## தெய்வம் எங்கே!?

ஆழமாய் நெஞ்சில் நிறைந்த,
ஆன்றநல் அறிவே தெய்வம்!
வேழமாய் ஆடும் மனத்தில்,
வேதனைகள் களையச் செய்யும்!
வாழையாய் அருகே நின்று,
வளமையாய் குளிர்ச்சி காட்டும்!
தோழமைத் தாள்களாய் நிறைந்து,
துவளாது துலங்கச் செய்யும்!
**31-08-2021**

## எண்ணுக கண்ணனை!

காடுறையும் மாயோனே,
கண்ணனென்பார்!
நாடுவார் மனந்தன்னில்,
நாளும் நடமிடுவான்!
ஆடும் மனதிலென்றும்,
அவனது ஆட்சியன்றோ!
தேடும் மனந்தனில்,
தெரியுமவன் காட்சியன்றோ!
வாடும் மனம்தேட,
வந்தேயவன் நின்றிடுவான்!
கூடும் மனமதின் கூற்றில்;
நிறந்தெழுந்து,
தேடா மனந்தன்னில்
தெளிவாய் நிறைந்திடுவான்!
கண்ணன் திருவடி;
நாளும் எண்ணுக மனமே!

30-08-2021

## நாளும் பாடுங்கள்!

எழுச்சி கொண்ட இளைஞர்களே!
எழுந்து வாருங்கள்!
இதயத்துள்ளே இறைவன் வாழும்,
இடத்தைத் தேடுங்கள்!
அன்பு எனும் பூக்களோடு,
அவனைத் துதியுங்கள்!
உலகமெலாம் அன்புநிதி
பெருகச் செய்யுங்கள்!
அன்பினாலே அனைத்தையுமே,
அளந்து பாருங்கள்!
அவனருளால், உலகமெலாம்,
செழித்து ஏகுமே!
நாளும் கூறுங்கள்! நாளும் கூறுங்கள்!
நமசிவாய ஓம்!
நாதமெலாம் அவன் குரலே,
நமசிவாய ஓம்!!

## இறையவன் யாரோ? (1990)

யாதவக் கண்ணன் போலே,
யான் கண்ட தெய்வம் இல்லை!
மாதவன் போல்வான் ஈசன்,
மரியவள் குழந்தை ஏசு;
சோதரர் சொல்லும் அல்லா;
சொல்லத்தான் வேறு அன்றி,
யாதுமே ஒன்றாம் அந்த;
ஈசனின் வடிவந்தானே!

## தொந்திக் கணபதியே!
அன்பின் திரு உருவாய்
ஆற்றலின் அருட் சுடராய்
இங்கு வாழ்ந்திருந்து,
எங்களை அணைப்பவனே
ஈசனின் திருமகனே
ஈடில்லாப் பரம்பொருளே

வினைகளை அறுத்தெடுக்கும்
வேதத்தின் காவலனே
மாதவன் மருமகனாய்
மண்ணில் நிறைபவனே!
தொந்திக் கணபதியே
துணை நீயே எமைக் காப்பாய்!

நெல்லில் அவல் கேட்பாய்,
நிறைந்த நல் கொழுக்கட்டை
மூத்த முழுப்பொருளாய்
முன்கையில் வைத்திருப்பாய்!
ஏரிக் குளக்கரையில்,

அரசமர நிழலில்,
வெயில் மழை தாங்கி,
வேதனைத் தனை களைவாய்!
வியாசனுக்குத் துணைபுரிய,
வெடுக்கென தந்தம் முறித்தாய்!

அன்பான குணநிதியே
அருளான பெருநிதியே
நிதியின் பெருமதியே!
மதியின் ஒளிச்சுடரே!
சுடரின் பேருவே!
உருவின் பெருங்கோவே!

## கண்ணனே காட்சி!
தேடிய நல்லுறவிலும்,
தெளிந்த நல்லுறவிலும்;
பாடிடும் நற்பொருளிலும்,
பழகிடும் நல்லொளியிலும்;
கூடிய பெரும் பொருளிலும்,
குலவிடும் நல்லன்பினில்,
ஓடியே அணைந்து நமை,
இரவும் பகலும் உவகையில்
ஆழ்த்துவான் கண்ணனே!

## கலைத் தாயே!
சொல்லும் மொழியாலும் சுவைகூறும் தமிழாலுமெனை;
என்நாளும்வல்லவனாய்க் கவிபடைக்க வைத்தாயே!
வல்லியசீர்க் கலைத்தாயே வாழ்த்துகிறேன் மகிழ்ந்தே!
தொல்லையில் அறிவினால், மண்ணாளும்வேந்தரைப்போல்,
கல்வியோடும்,மருவிலாக் கீர்த்தியோடும், எந்நாளும்
வல்லவராய் என்மக்கள் வாழ்ந்திருக்க வேண்டுவனே!
02-11-2005 (8.30 AM)(கூத்தனூர் சரஸ்வதி கோயில்)

செல்வமும் கல்வியும் பொங்கும் தனமுமாய்,
வல்லோன் அருளினில் வாய்த்திட-அல்லன,
இத்தரையில் நீங்கிட நாடிடுவீர் இன்பத்தை
சித்தி வினாயகனே காப்பு!

## *அனுமனே போற்றி! போற்றி!!*
அஞ்சனை மைந்தனே அனுமனே போற்றி! போற்றி!
ஆயர் குலக் கொழுந்தே அனுமனே போற்றி! போற்றி!
மாய வினை தீர்க்கும் மருவிலா பரம் பொருளே! போற்றி!
தீயன களைந்திடுவாய், தீதில்லா மனம் தருவாய்!

போயின துன்பம் எனும் துயரிலா மனம் தருவாய்!
மாயக் கண்ணனும்தான் உன்மருவிலா இராமனானான்!
நேயம் கொண்டார்க்கு நெடிதும் நீ துணை நிற்பாய்!
ஆயக் கலை வேண்டேன் அற்புத நிலை வேண்டேன்!

ஆயிரம் கரங்கொண்ட ஆதவனைப் பிடித்தோனே!
மாயமாம் வாழ்வியலின் மருவிலா நிலைக் காட்டு!
தேயுமாம் வாழ்வுந்தான் திகழ்தல் தானெதற்கு!
தீயுமாம் மனக் குழப்பம் திருவடி கோருகின்றேன்!
*கவிவளவன்* 23-12-2022 (6.30 பி.எம்)

## எங்கள் வேலவா!
தணிகை வேலவனே! எங்கள் தண்டமிழ் நாயகனே!
பிணி சூழும் மனத்தின் பேதைமையைக் களைவோனே!
அணியாக மலைதோறும் ஆளுமெங்கள் தலை மகனே!
பணிவன்பால் உனைத்தேடி நானும் பார்த்து மகிழ்வேனே!

எமையாளும் பரம்பொருளே! உனை ஈசனுக்கு மகனாக்க,
உமையவளும் தாயாகக் கொண்டு உலகுக்குத் தெரிபவனே!
அமையும் குன்றுகளில் ஆதவன் ஒளியாய் ஆள்வோனே!
சுமையின்றி மனம் சூட யாவருக்கும் நாளும் அருள்வோனே!
கவிஞர் கவிவளவன், 05-06-2022 (10.30 PM)

